செ.வெ.எண்.100 நாள்.11.06.2019

# பத்திரிக்கை செய்தி

**காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலில் அத்திவரதர் வைபவம் – 2019 வருகிற ஜீலை மாதம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெற உள்ளதை முன்னிட்டு இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் /ஆணையர் திரு.கே.பனீந்திர ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் இராமச்சந்திரன் அவர்கள் திருக்கோயிலில் நடைபெற்று வரும் பணிகளை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலுக்குள் இருக்கும் அனந்தசரஸ் குளத்திலிருந்து ஸ்ரீ ஆதி அத்திகிரி வரதர் மூலவர் 02.07.1979 ம் ஆண்டு வெளியில் எழுந்தருள செய்தார். 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்நிகழ்வு நடைபெற்று வருவதாக அய்தீகம் . இதனை தொடர்ந்து 01.07.2019 அன்று ஸ்ரீ ஆதி அத்திகிரி வரதர் மூலவர் வெளியில் எழுத்தருள உத்தேசித்திருப்பதால் இதனை முன்னிட்டு இந்து சயம அறநிலையத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் பொது மக்கள் மூலவர் திரு ஆதாரனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய (11.06.2019) தினம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் இராமச்சந்திரன் அவர்கள் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயில் இருக்கும் ஸ்ரீ ஆதி அத்திகிரி வரதர் மூலவரை திரு ஆதாரனை செய்ய வரும் பொதுமக்கள் எந்ததொரு சிரமமின்றி வழிபாடு செய்ய கிழக்கு இராஜகோபுரம் முதல் தேசிகர் சன்னதி வழியாக பொது தரிசனத்திற்கு தனிவழியாகவும், கிழக்கு இராஜகோபுரம் முதல் தேசிகர் சன்னதி வழியாக வசந்த மண்டபம் வழியாக சிறப்பு தரிசனம் தனிவழியாகவும், சிறப்பு தரிசனத்திற்கு கட்டணமாக ரூ.50ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், ஸ்ரீதேவராஜர் மற்றும் தாயார் சன்னதிகளுக்கு செல்லும் வழிக்கான மேற்கு இராஜகோபுரத்திலிருந்து தனியாக ஒரு வரிசை ஏற்படுத்தி மூலவர் மற்றும் தாயாரை தடையின்றி தரிசனம் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெறும் திருஆராதனை நிகழ்வில் முதல் 24 நாட்களுக்கும் சயன கோலமும், அடுத்த 24 நாட்களுக்கு நின்றகோல தரிசனமும் நிகழ உள்ளது. தரிசன நேரமாக காலை 6 மணி முதல் 2 மணி வரை மீண்டும் மதியம் 3 மணி முதல் 8 மணி வரையும் மற்றும் ஆனி கருட மற்றும் ஆடி கருட உற்சவத்திலிருந்து மாலை 6 மணி முதல் 9 மணி வரை பொது தரிசனம் இல்லை.

காஞ்சிபுரம் நகரத்தில் தற்காலிக பேருந்து நிலையமாக ஓரிக்கை, ஒலிமுகமதுபேட்டை, பச்சையப்பன் கல்லூரி வளாகம் ஆகிய மூன்று இடங்களில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்கள் எளிதில் கோயிலுக்கு வந்து செல்ல தற்காலிக வாகன நிறுத்தும் இடத்திலிருந்து திருக்கோயில் அருகில் வருவதற்கு 10 பேருந்துகளை 10 நிமிடத்திற்கு ஒருமுறை இயக்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தனியார் கார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமாக பச்சையப்பன் கல்லூரி (நசரத்பேட்டை), திருவீதிபள்ளம், பெரிய தோட்டம் (நகரம்), ஒளிமுகமதுபேட்டை என தேர்வு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் நகராட்சி பகுதியில் 70 கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், கோயிலைச் சுற்றியுள்ள 4 மாட வீதிகளிலும் ஆண், பெண் இருபாலருக்கும் தலா 11 வீதம் 22 தற்காலிக கழிப்பிடம் கூடுதலாக அமைக்கவும், சின்ன காஞ்சிபுரம் பகுதியில் 36 எண்ணிக்கையும், பெரிய காஞ்சிபுரம் பகுதியில் 92 எண்ணிக்கையும் கழிப்பிட வசதி ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

மேலும், தற்காலிக பேருந்து மற்றும் வாகன நிறுத்தும் இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோயில் உட்புறத்தில் 2 சுத்திகரிப்பு இயந்திரங்களும், வெளிப்புறத்தில் 4 சுத்திகரிப்பு இயந்திரங்களும் பொருத்தப்படவுள்ளது. நகரின் முக்கிய பகுதிகளில் 6 புதிய சுத்தகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளது. 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட நீர்தேக்க குடிநீர் தொட்டி கோயிலுக்குள் ஒன்றும், கோயிலுக்கு வெளிப்புறத்தில் 10 இடங்களிலும் அமைக்கப்படவுள்ளது. நகரின் முக்கிய பகுதிகளில் 85 இடங்களில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ளது.

காஞ்சிபுரம் நகரை சுற்றியுள்ள பகுதிகளின் சாலைகளை சீரமைக்கவும், கோயிலுக்கு செல்லும் வழி தொடர்பான வழிகாட்டிப் பலகை வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் கோயில் அருகே காவல் கட்டுப்பாட்டு அறையும், நகரை சுற்றி முக்கிய பகுதிகளில் CCTV கருவி அமைத்து கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பாதுகாப்பு பணிக்காக ஊர்க்காவல் பணியாளர் , NSS மற்றும் NCC மாணவர்களை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார துறையின் மூலமாக வாகன மண்டபம், திருமங்கையாழ்வார் சன்னதி, மேற்கு மாடவீதி, வாலாஜாபாத் நுழைவு போன்ற தற்காலிக பேருந்து நிறுத்தங்களில் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்திடவும் முக்கிய பகுதிகளில் 108 ஆம்புலன்ஸ் உடன் கூடிய தற்காலிக மருத்துவ அறையினை அமைத்து 24 மணி நேரமும் அனைத்து மருத்துவர்களும் அரசு மருத்துவமனையில் பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்திவரதர் வைபவம் நடைபெறும் நாட்களில் அன்னதானம் வழங்க விரும்புபவர்கள் காஞ்சிபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்து உணவு பாதுகாப்பு துறையின் மூலம் அன்னதானம் செய்ய உரிமம் பெற்றிருக்க வேண்டும். மேலும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சுத்தமாகவும், சுகாதாரத்துடன் தரமான உணவுகளை அன்னதானமாக வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அருள்மிகு அத்திவரதர் வைபவம் – 2019 திருவிழாவிற்காக காஞ்சிபுரம் நகராட்சி மூலம் 437.00 இலட்சம், மின்வாரியத்துறை மூலம் 92.37 இலட்சம், நெடுஞ்சாலைத் துறை மூலம் 496.70 இலட்சம் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் உபயதாரர்கள் மூலம் 252.35 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ரூ.10.00 இலட்சம் ஆக 12.89 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட உள்ளது. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சந்தோஷ் ஹதிமானி இ.கா.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ட்டி . ஸ்ரீதர், காஞ்சிபுரம் சார் ஆட்சியர் திரு.செ.சரவணன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திரு. இரா.செந்தில் வேலன், உதவி ஆணையர் திருமதி.க.ரமணி, செயல் அலுவலர் திரு.தியாகராஜன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு தலைவர் வாலாஜாபாத் பா.கணேசன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் – காஞ்சிபுரம்